10/=

பக்கங்கள் 06

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 107 வெள்ளிக்கிழமை செப்ரெம்பர் 01 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



# இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்போம்

## அமெரிக்கா வாக்குறுதி

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு சகல வகையிலும் அமெரிக்கா ஒத்துழைப்புக்களை வழங்குவதோடு அரசாங்கத்துக்கு அழுத்தங்களை வழங்குவோம் எனவும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் உதவிச் செயலர் அலிஸ் வெல்ஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவித்துள்ளார்.

பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் உதவிச் செயலர் அலிஸ் வெல்ஸ் அம்மையாருக்கும் இடையிலான சந்திப்பு இன்று காலை அமெரிக்கத் தூதுவர் இல்லத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

06



## பொன்சேகாவே பொறுப்பு

“போர்க்குற்றச்சாட்டுகளுக்கு இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவே பொறுப்புக் கூற வேண்டும்” என்று முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பிரேசிலில் போர்க்குற்ற வழக்கை எதிர்கொண்டுள்ள அவர், கொழும்பு திரும்பிய பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

தனக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகளை நிராகரித்த ஜெனரல் ஜயசூரிய, இந்தக் குற்றங்களுக்குத் தான்

06

## சுஸ்மாவைச் சந்திக்க மகிந்த முயற்சி



இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜைச் சந்திக்க மகிந்த அணியினர் கடும் பிரயத்தனம் மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்து சமுத்திர மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ், இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில், அவரைச் சந்திப்பதற்கு மகிந்த அணியினர் கடும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். மகிந்த அணியின் இந்த முயற்சிக்கு இந்தியத் தரப்பிலிருந்து இது வரை சாதகமான பதில் கிடைக்கவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஹம்பாந்தோட்டை துறைமுக விவகாரம் மற்றும் மத்தள விமான நிலையம் தொடர்பாகவே மகிந்த அணியினர் சுஸ்மாவுடன் உரையாடுவதற்கு முயற்சிப்பதாக தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (எ)

## சாட்சியத்துக்கு அச்சுறுத்தல்


சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் இளைஞர் ஒருவர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார். அது தொடர்பிலான வழக்கின் சாட்சியத்துக்கு அனுராதபுர சிறைச்சாலையில் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முறையிடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருகையில்,

சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் வைத்து சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

அந்த வழக்கின் சாட்சியாக இருந்தவருக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நடைபெற்ற வழக்கொன்றில் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அதனால் குறித்த சாட்சியம் கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நேற்று நடைபெற்ற வழக்குக்காக , இளைஞனின்

06



## ரணிலைச் சந்தித்தார் சுஸ்மா

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் பிரத்தியேகச் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அலரிமாளிகையில் நடைபெற்ற இச் சந்திப்பில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித்சிங் சந்து, இந்திய வெளிவிவகாரங்களுக்கான செயலாளர் ஜெய்சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன், இலங்கை சார்பாக வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சர்களான சாகல ரட்நாயக்க, மலிக் சமரவிக்கிரம உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

இச்சந்திப்பின் போது புதிய தேசிய அரசாங்கம் முன்னெடுத்துவரும்

06

## இராணுவ கூட்டில்லை

இலங்கை எந்தவொரு நாட்டோடும் இராணுவக் கூட்டை ஏற்படுத்தாது என்றும், வெளிநாடுகள் இங்கு படைத்தளங்களை அமைக்க அனுமதிக்கப்படாதென்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற சமுர்த்தி மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதமர், இலங்கையிலுள்ள எமது படைத்தளங்களை வெளிநாடுகள் பயன்படுத்த அனுமதி வழங்கப்படமாட்டாதென கூறினார். ஆயினும் இலங்கை நட்பு நாடுகளுடன் இராணுவ ஒத்துழைப்பை தொடரும் எனக் குறிப்பிட்ட பிரதமர், படைப்பயிற்சி, போர்த்தளங்களைப் பெறுதல், கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுதல் என்ற வகையில் ஒத்துழைப்புத் தொடரும் எனத் தெரிவித்தார்.

06

## டெங்குப் பரிசோதனை தென்மராட்சியில் தீவிரம்

தென்மராட்சியின் சகல பிரதேசங்களி லும் கடந்த புதன்கிழமை தொடக்கம் தீவிர டெங்குப் பரிசோதனை இடம்பெற்று வருகி றது. டெங்குப் பரிசோதனையை சுகாதார உத்தியோகத்தர்கள்,பிரதேச செயலகத்தி னர்,பொலிஸார் மற்றும் படையினர் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

பல பிரிவுகளாகப் பிரிந்து பல பகுதிகளி லும் தீவிர சோதனை இடம்பெற்று வருகின் றமை குறிப்பிடத்தக்கது. டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சூழல் வைத்திருப்பவர்க ளுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது டன் பல வீடுகளுக்கு வீட்டு சூழலை உரிய முறையில் பேணுமாறு எச்சரிக்கை விடப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

அடுத்து வரும் தினங்களிலும் டெங்கு நுளம்பு பரிசோதனை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. தென்மராட்சியில் அண்மைக் காலமாக டெங்குத் தாக்கம் அதிக ரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (உ)





### இரத்தினபுரியில் விபத்து

## ஒரே குடும்பத்தவர் மூவர் பலி

இரத்தினபுரி படுகெதர பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளதோடு, 5 பேர் காயமடைந்துள்ளனர். நேற்றிரவு 11.50 மணியளவில் கார் மற்றும் கெப் ரக வாகனமொன்றும் நேருக்கு நேர் மோதுண்டதால் குறித்த விபத்து நேர்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது காரில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் சம்பவயிடத்திலேயே உயிரிழந்துள்ளனர். குறித்த விபத்தில் உயி ரிழந்தவர்கள் அம்பாறை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனக் கண்ட றியப்பட்டுள்ளது. கெப் ரக வண்டியில் பயணித்த 5 பேரும் காயமடைந் துள்ள நிலையில் இரத்தினபுரி வைத்தியசாலையில் சிகிச்சைக் காகச் சேர்க்கப்பட்டுள்ளதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்துள்ள னர். (உ)

## ஆதரவாக இருக்க வேண்டும்



முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக சுமத்தப்பட் டுள்ள குற்றச்சாட்டுக்கு அரசாங்கம் நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூறியுள் ளார்.

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கு பங்களிப்புச் செய்த இராணுவ வீரர்களுக்கு எதிராக அவ்வாறான நடவடிக்கைகள் எடுப்பது குறித்து கவலையடைவதாக அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன் றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப் பிய கேள்விக்குப் பதில் வழங்கும்போதே அவர் இதனைக் கூறினார். இது தொடர் பில் ஊடகங்களும் அதிகமாக குரல் கொடுக்க வேண்டும் என்று அவர் கூறி யுள்ளார்.

அதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஊடகவியலாளர் கள் கேள்வி எழுப்பியபோது, வாக்காளிக் கும் உரிமை மீறப்பட்டுள்ளதாகவும், அதற்கு எதிராக நீதிமன்றம் செல்வதாக வும் அவர் கூறினார். (உ)

## விவசாய வாரம் பிரகடனம்



ஒக்ரோபர்மாதம்முதல்வாரத்தைத் தேசிய விவசாய வாரமாகப் பிரகடனப்படுத்துவ தாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். நேற்று மட்டக்களப்பு கரடி யனாறு விவசாய சேவைகள் பயிற்சி நிலை யத்தைத் திறந்துவைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதி பதி இதனைத் தெரிவித்தார்.

ஒக்ரோபர்மாதம்முதல்வாரத்தை தேசிய விவசாயிகள் வாரமாகப் பிரகடனப்படுத்துவ துடன், முழு நாடும் ஒன்றிணைந்த விரி வான விவசாய நிகழ்ச்சித்திட்டத்தை அவ் வாரத்தில் நடைமுறைப்படுத்தத் திட்ட மிட்டுள்ளதாக ஜனாதிபதி கூறினார்.

நாட்டு மக்களை வறுமையிலிருந்து விடு வித்து அவர்களது பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு அரசாங்கம் முக்கியத் துவம் அளித்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

நாட்டின் விவசாய மற்றும் கைத்தொழிற் றுறையில் விரிவான மாற்றங்களைக் கொண்டு வந்து நாட்டின் தேசிய பொருளாதாரத் தைப் பலப்படுத்துவதற்காகத்தான் அண் மையில் நியமித்த தேசிய பொருளாதார சபை எதிர்வரும் 12ஆம் திகதி முதன் முறை யாகக் கூடவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரி வித்துள்ளார். (உ)

## கைலாசபதி அரங்கில் இசை நிகழ்வு

யாழ்ப்பாணம் - பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் "செரண்டிப் மியூ சிக் லாப்" எனும் இசை நிகழ்வு இடம்பெற வுள்ளது.

குறித்த நிகழ்வு நாளை மாலை 6 மணிய ளவில் நடைபெறவுள்ளதுடன், யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை, ஜேர்மன் கோத்தே நிறுவனம் மற்றும் சுவிஸ் தூதரகம் ஆகியன இணைந்து நடத்தவுள்ள னர்.

இந்த இசை நிகழ்வில் இலங்கை, சுவிஸ், ஜேர்மன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மிகச் சிறந்த இசைக் கலைஞர்கள் கலந்து சிறப் பிக்கவுள்ளனர். (உ)

## விடுமுறை

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய தேர்த்திருவிழா எதிர்வரும் செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது. அதனை முன் னிட்டு தேர்த்திருவிழாவன்று நெல்லியடி வர்த்தக சங்கத்துக்குட்பட்ட வர்த்தக நிலை யங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என வர்த்தக சங்கச் செயலாளர் சுரேரஞ்சன் தெரிவித்துள்ளார். (உ-11)

## இலஞ்சக் குற்றச்சாட்டு; 20 ஆண்டு கடூழியச் சிறை



இலஞ்சம் பெற முயன்ற குற்றச்சாட் டில் அரச அதிகாரி ஒருவருக்கு 20 ஆண்டு கள் கடூழிய சிறைத் தண்டனை வழங்கப் பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றம் இந்த உத் தரவைப் பிறப்பித்துள்ளது. விவசாயி ஒருவரிடம் 10 ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாக பெற முயன்ற அதிகாரிக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அதிகாரி ஹட்டன் பிரதேசத் தைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது. மேலும், விவசாயம் செய்வதற்கு வன பகுதியை அழித்த சம்பவம் தொடர்பில் வழக்குத் தொடராமல் இருப்பதற்கு இலஞ் சம் பெற முயன்றுள்ளதாகவும் குறிப்பிடப் படுகின்றது. (உ)





## உதவித் திட்டம்

மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் பயிற் சிகளை இவ் வருடம் மேற்கொள்ளும் மாணவிகளுக்கு மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான மூலப்பொருட்கள் வழங் கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண சபை யின் யாழ். மாவட்ட மாகாணசபை உறுப்பினரான என். விந்தன் கனகரட் ணம் தனக்குரிய 2017 ஆம் ஆண்டுக்கான பிரமான அடிப்படையிலான மூலதன நன் கொடை நிதி ஒதுக்கீட்டின் மூலம் இவற்றி னைக் கொள்வனது செய்து வழங்கியுள் ளார். இதனடிப்படையில் வேலணை மகளிர் அபிவிருத்தி நிலையம், நெடுந்தீவு மகளிர் அபிவிருத்தி நிலையம், காரைநகர் மகளிர் அபிவிருத்தி நிலையம், ஊர்காவற் றுறை மகளிர் அபிவிருத்தி நிலையம் ஆகியவற்றுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவுக் கான பொருட்களும் யாழ்ப்பாணம் மக ளிர் அபிவிருத்தி நிலையத்துக்கு முப்பத்து நான்கு ஆயிரம் ரூபாவும், நல்லூர் மகளிர் அபிவிருத்தி நிலையத்துக்கு முப்பத்து மூன்று ஆயிரம் ரூபாவும், மற்றும் அக்லி யம் வக்கேசனல் அவிவிருத்தி நிலையத் துக்கு முப்பத்து மூன்று ஆயிரம் ரூபா பெறு மதியான பொருட்களும் என ஏழு மகளிர் அபிவிருத்தி நிலையங்களுக்கு வழங்கப்பட் டுள்ளன. (உ)



# அணுகுண்டில் தப்பியவர் சாவு

ஜப்பானின் நாகசாகி நகரில் நடத்தப்பட்ட அணு குண்டு தாக்குதலில் உயிர் தப்பிய தபால்காரர் சுமித்ரு தானிகுச்சி 88 ஆவது வயதில் நேற்று காலமானார். இரண்டாம் உலகப்போரின் போது கடந்த 1945 ஒகஸ்ட் 9ஆம் திகதி ஜப்பானின் நாகசாகி நகர் மீது 'ஃபேட் மேன்' என்றஅணுகுண்டை அமெரிக்கா வீசியது. இந்தக் குண்டு வீசப்பட்ட இடத்தில் இருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் சுமித்ரு சைக்கிளில் தபால்களை விநியோகம் செய்து கொண்டிருந்தார். அப்போது அவருக்கு வயது 16. அணுகுண்டு வெடித்த சத்தத்தை கேட்ட அவர் தரையில் படுத்துக் கொண்டார். இருப்பினும் அணுகுண்டின் வெப்பத்தால் அவரது உடல் முழுவதும் தோல் உரிந்து கொப்பளங்கள் வெடித்தன. சுமார் 4 ஆண்டுகள் அவர் மருத்துவ மனையில் சிச்சை பெற்றார். 16 முறை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. 1949ஆம் ஆண்டு மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய அவர் அணு ஆயுதங்களுக்கு எதிரான பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார். தான் செல்லும் இடமெல்லாமல் அணு குண்டு வீச்சில் பாதிக்கப்பட்ட தனது உடலைக் காண்பித்து அதன் கொடுரத்தை மக்களுக்கு விளக்கினார். சில ஆண்டுகளாக புற்றுநோயால் அவதிப்பட்ட அவர் நாகசாகி நகரில் நேற்று உயிரிழந்தார். அவரது இறுதிச் சடங்கு இன்று நடைபெற உள்ளது. (இ)

# கட்டடம் இடிந்தது; 11 பேர் உயிரிழப்பு


இந்தியாவின் பொருளாதார தலைநகரமாகக் கருதப்படும் மும்பையில் ஒரு ஆறு மாடிக் கட்டடம் இடிந்து விழுந்ததில் 11 பேர் இறந்துள்ளனர். 24 பேர் மீட்கப்பட்டுள்ளனர்

நேற்று முன்தினம் இந்திய நேரப்படி 8.40 மணிக்கு இந்தக் குடியிருப்புப் பகுதி இடிந்து விழுந்துள்ளது. கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள பலரை மீட்கும் பணியை மீட்புப் பணியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இடிந்த கட்டத்துக்குள் ஐந்து முதல் பத்து பேர் வரை இன்னும் சிக்கியிருப்பதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.மக்கள் தொகை நிறைந்த பெண்டி பஜார் பகுதியில் உள்ள இந்தக் கட்டடம் 100 ஆண்டுகள் பழமையான கட்டடம் என்று நம்பப்படுகிறது. அம்புலன்ஸ்கள், தீயணைப்பு வாகனங்கள் மற்றும் பேரிடர் நிவாரணப் படை ஊழியர்கள் ஆகியோர் சம்பவம் நடந்த பகுதியில் மீட்புப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.இடிபாடுகளுக்குள் சிக்கியவர்கள் இன்னும் மீட்கப்படாததால், உயிரிழப்புகள் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (இ)



# நீலத்திமிங்கில தலைவி கைது




நீலத் திமிலங்கிலம்( புளூ வேல்) விளையாட்டின் தலைவராக இருந்து பலருக்குக் கட்டளைகளை வழங்கிய ரஷ்யாவைச் சேர்ந்த சிறுமி ஒருவர்கைது செய்யப்பட்டுள்ளார். இளைஞர்களின் உயிரைப் பலியாக்கி வரும் புளூவேல் என்ற ஆபத்தான விளையாட்டு ரஷ்யாவில் 2013 இல் உருவாக்கப்பட்டது. ஒன்லைனில் விளையாடும் இந்த விளையாட்டால் கடந்த 3 ஆண்டுகளில் ரஷ்யாவில் மட்டுமே 130 பேர் தற்கொலை செய் திருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. சீனா, ஆர்ஜெண்டினா உள்ளிட்ட நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த இந்த விளையாட்டு, தற்போது இந்தியாவிலும் விபரீதத்தைக் காட்ட ஆரம்பித்திருக்கிறது. கடந்த இரு மாதங்களில் புளூ வேல் விளையாட்டின் காரணமாகத் தற்போது வரை இந்தியாவில் 6 பேர் தற்கொலை செய்து கொண்டதாகச் செய்திகள் கூறுகின்றன. மதுரையைச் சேர்ந்த விக்னேஷ்(வயது-19) இந்த விளையாட்டின் காரணமாக நேற்றுக் காலை தனது வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார். இந்த நிலையில் புளூ வேல் விளையாட்டுக்கு தலைவராக இருந்து பலருக்கு கட்டளைகள் வழங்கிய ரஷ்யாவைச் சேர்ந்த 17 வயது சிறுமி கைது செய்யப்பட்டுள்ளார். "புளூ வேல் விளையாட்டை விளையாடிய இந்தச் சிறுமி அந்த விளையாட்டின் கடைசி இலக்கான தற்கொலை செய்து கொள்வது பற்றி தெரிந்தபோது அதிர்ச்சி அடைந்துள்ளார். அதில் சுதாரித்துக் கொண்ட அந்தச் சிறுமி பின்னர், இந்த விளையாட்டின் தலைவராக மாறி, இலக்குகளை வழங்குவதாக, இந்த விளையாட்டை உருவாக்கியவர்களிடம் உறுதி வழங்கியுள்ளார். பின்னர் அதன்படி செயற்பட்டுள்ளார்" என்று ரஷ்யப் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# சவால்



வடகொரியாவுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக அமெரிக்கா நேற்று நடுவானில் ஏவுகணைகளை எதிர்த்து அழிக்கக்கூடிய ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதித்துள்ளது.

சர்வதேச நாடுகள் மற்றும் ஐ.நா. சபையின் எதிர்ப்பையும் மீறி, அணு ஆயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது வட கொரியா. அந்த நாட்டின் மீது, ஐ.நா. சபை பொருளாதாரத் தடை விதித்துள்ளபோதும், அதை வட கொரியா பொருட்படுத்தவேயில்லை. இந்த நிலையில், ஜப்பானைக் கடந்து பசிபிக் பெருங்கடலில் ஏவுகணைச் சோதனை ஒன்றை வடகொரியா அரங்கேற்றியது. 'பசுபிக் பெருங்கடலில் நிகழ்த்தும் முதல் வெற்றிகர ஏவுகணைச் சோதனை. இதுபோல் பல தாக்குதல்கள் பின்னாளில் தொடரும்' என்று வட கொரியா அதிகாரபூர்வ அறிக்கை ஒன்றையும் வெளியிட்டது.

இந்த நிலையில், வடகொரியாவுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்கா ஏவுகணைகளைத் தடுத்து நிறுத்தி அழிக்க கூடிய ஏவுகணை ஒன்றை வெற்றிகரமாக நேற்றுச் சோதனை செய்தது. இதைத்தொடர்ந்து இன்று தென் கொரியாவுக்கு அமெரிக்காவின் முக்கிய ஏவுகணைகளை படை எடுத்துச் சென்றுள்ளது. வடகொரியாவின் எதிரி நாடான தென் கொரியாவில் ஏவுகணைகளை நிலை நிறுத்துவதன் மூலம் வடகொரியாவுக்கு அமெரிக்கா வெளிப்படையாகவே சவால் விடுப்பதாகவே தெரிகிறது. (இ)

# வடகொரியாவுக்கு ஐ.நா. கண்டனம்

வடகொரியாவின் ஏவுகணைச் சோதனைக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

வடகொரியா நடத்திய ஏவுகணைச் சோதனையைத் தொடர்ந்து ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டம் கூட்டப்பட்டது. அப்போது மிரட்டல் விடுக்கும் வகையில் வடகொரியா நடத்திய ஏவுகணைச் சோதனைக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. கொரியத் தீபகற்பத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க, வேண்டுமென்றே இந்தச் சோதனையை வடகொரியா நடத்தி இருப்பதாகவும், எனவே பதற்றத்தைத் தணிக்க உறுதியான மற்றும் உடனடி நடவடிக்கைகளில் வடகொரியா ஈடுபட வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது. மேலும் இத்தகைய நடத்தையை சர்வதேச சமூகம் சகித்துக் கொண்டிருக்காது என்றும் வடகொரியாவுக்கு எச்சரிக்கை விடுத்து அறிக்கை அனுப்பியுள்ளது ஐ.நா. சபை. (இ)

# இந்தியாவில் விரைவில் புதிய அமைச்சரவை!

இந்திய மத்திய அமைச்சர்களான ராஜீவ் பிரதாப் ரூடி, மகேந்திர நாத் பாண்டே ஆகியோர் நேற்றுத் திடீரென்று தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விரைவில் தனது அமைச்சரவையை மாற்றியமைக்க வசதியாகவே அவர்கள் பதவியைத் துறந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

மத்திய அமைச்சரவையில் இருந்த அனில் மாதவ் தவே மரணம் அடைந்ததாலும் மற்றும் மனோகர் பாரிக்கர், வெங்கையா நாயுடு ஆகியோர் இராஜினாமாச் செய்ததாலும் ஏற்பட்ட வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படவில்லை. மேலும் சமீபத்தில் நடந்த ரயில் விபத்துகளுக்கு பொறுப்பேற்று ரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபுவும் தனது பதவியை இராஜினாமாச் செய்ய முன்வந்துள்ளார்.இதனாலேயே பிரதமர் மோடி தனது அமைச்சரவையை மாற்றி அமைக்கவுள்ளார்.

இந்தநிலையில், பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய தலைவர் அமித்ஷா நேற்று அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினார். இதன் பின்னரே குறித்த இரு அமைச்சர்களும் புதிய அமைச்சரவை உருவாக்க வசதியாகத் தமது பதவிகளை இராஜினாமாச் செய்தனர். (இ)

# பெனாசிர் பூட்டோ கொலை முஷாரப்பே குற்றவாளி!




பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கொலை வழக்கில், முஷாரப் தலைமறைவுக் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ (வயது 54), ராவல்பிண்டி நகரில் லியாக்கத் பாக் என்ற இடத்தில் 2007 ஆம்ஆண்டு டிசெப்ம்பர்மாதம் 27 ஆம்திகதி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது துப்பாக்கியால் சுட்டும், குண்டுகளை வெடிக்க வைத்தும் படுகொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலை, உலக அரங்கை உலுக்கியது. இந்தப் படுகொலை தொடர்பாக அப்போதைய பாகிஸ்தான் அதிபர் முஷாரப், பாகிஸ்தான் தலிபான் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த ரபாகத் உசேன், ஹஸ்னைன் குல், ஷெர் ஜமான், அய்த்ஜாஸ் ஷா, அப்துல் ரஷீத் மற்றும் சம்பவத்தின்போது ராவல் பிண்டி நகர உயர் பொலிஸ் அதிகாரிகளாகப் பணியாற்றிய சவுத் அஜிஸ், குர்ரம் ஷாஜாத் ஆகியோர் மீது வழக்கு தொடரப்பட்டது.

விசாரணை முடிந்த நிலையில் இந்த வழக்கில் நீதிபதி அஸ்கார் கான் நேற்றுத் தீர்ப்பு வழங்கினார். தீர்ப்பில், முஷாரப் தலைமறைவுக் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது சொத்துகளை முடக்கவும் உத்தரவிடப்பட்டது. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த பாகிஸ்தான் தலிபான் அமைப்பைச் சேர்ந்த ரபாகத் உசேன், ஹஸ்னைன் குல், ஷெர் ஜமான், அய்த்ஜாஸ் ஷா, அப்துல் ரஷீத் ஆகிய 5 பேர் விடுதலை செய்யப்பட்டனர். சம்பவம் நடந்து 10 ஆண்டுகளுக்கு பிறகு இந்த வழக்கில் தீர்ப்பு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ)




# 3ஆவது சுற்றுக்கு முன்னேற்றம்

'கிராண்ட்ஸ்லாம்' அந்தஸ்துப் பெற்ற அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் அடுத்த சுற்றுக்கு பெடரர், நடால், மரின் சிலிச் ஆகியோர் முன்னேறினர்.

அதேவேளை, ஜேர்மனியின் இளம் நட்சத்திர வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

அண்மையில் ரோஜர் பெடரைத் தோற்கடித்து ரோஜர்ஸ் கிண்ணத்தை வென்றவரும், உலகத் தரவரிசையில் 6ஆவது இடத்தில் உள்ளவருமான ஸ்வெரேவை, 61ஆம் நிலை வீரரான பேரானா கோரிச் (குரோஷியா) 3:6, 7:5, 7:6, 7:6 என்ற சுற்றுக் கணக்கில் சாய்த்தார்.

இதேபோல் அபாயகரமான வீரராக வர்ணிக்கப்படும் ஆஸ்தி தனது முதல் சுற்றில் சக நாட்டவரான ஜோன் மில்மானிடம் 3:6, 6:1, 4:6, 1:6 என்ற சுற்றுக் கணக்கில் வீழ்ந்தார்.

12ஆம் நிலை வீரர் சோங்காவுக்கும் (பிரான்ஸ்) அதிர்ஷ்டம் இல்லை. அவர் 4:6, 4:6, 6:7 என்ற சுற்றுக் கணக்கில் 18 வயதான தகுதிநிலை வீரரான டெனிஸ் ஷபோவலோவிடம் (கனடா) அடங்கிப்போனார்.

மற்றொரு ஆட்டத்தில் முன்னாள் சம்பியனான குரோஷ்யாவின் மரின் சிலிச், 6:3, 6:3, 6:3 என்ற சுற்றுக் கணக்கில் ஜேர்மனியின் புளோரியன் மேயரை எளிதில் வீழ்த்தி 3ஆவது சுற்றுக்குள் நுழைந்தார்.

மூன்றாம் நிலை வீரரான சுவிட்ஸர்லாந்தின் பெடரர், 6:1, 6:7, 4:6, 6:4, 6:2 என்ற சுற்றுக் கணக்கில் ரஷ்யாவின் பெர்டிசை கடும் போராட்டத்துக்கு மத்தியில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

முதல் நிலை வீரரான நடால், 4:6, 6:3, 6:2, 6:2 என்ற சுற்றுக் கணக்கில் ஜப்பானின் டானியலை வீழ்த்தினார். (ஐ)



# 100 கொடுத்த 6

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கான தரவரிசைப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நேற்று வெளியிட்டுள்ளது.

இதன்படி துடுப்பாட்டத் தரவரிசையில், பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்டில் சதமடித்த ஆஸ்திரேலிய வீரரான டேவிட் வோர்னர் 5 இடங்கள் முன்னேறி 6ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

ஸ்ரீபன் ஸ்மித் (ஆஸ்திரேலியா), ஜோரூட் (இங்கிலாந்து) கனே வில்லியம்சன் (நியூஸிலாந்து), புஜாரா (இந்தியா), விராட்கோலி (இந்தியா) ஆகியோர் முறையே முதல் 5 இடங்களை எந்தவித மாற்றமும் இன்றி வகிக்கின்றனர்.

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் 134, 95 ஓட்டங்களைச் சேர்த்த மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தொடக்க வீரரான பிராத்வைட் 14 இடங்கள் முன்னேற்றமடைந்து 16ஆவது இடத்தையும், இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் அடித்த ஷாய்ஹோப் 60 இடங்கள் முன்னேறி 42ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் ரவீந்திர ஜடேஜா (இந்தியா), ஜேம்ஸ் அண்டர்சன் (இங்கிலாந்து), அஸ்வின் (இந்தியா) ஆகியோர் முறையே முதல் 3 இடங்களில் தொடர்கின்றனர்.

சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் ஷகிப் அல்-ஹசன் (பங்களாதேஷ்), ரவீந்திர ஜடேஜா (இந்தியா), அஸ்வின் (இந்தியா) ஆகியோர் முதல் 3 இடங்களில் நீடிக்கின்றனர். (ஐ)

# ஒரு நாளுக்கு 3 லட்சம்



'நான் கடவுள்' படத்தில் பாலா அறிமுகம் செய்த வில்லன் நடிகர் மொட்டை ராஜேந்திரன். கொடூரமான வில்லனாக நடித்து வந்த இவர், தற்போது நகைச் சுவைக்கு மாறிவிட்டார்.

நகைச்சுவை வில்லனாக நடித்து வரும் அவருக்குக் கை நிறைய பட வாய்ப்புகள். நடித்துக் கொடுக்க முடியாத அளவுக்கு பட வாய்ப்புகள் வருவதால், இவர் தனது சம்பளத்தை உயர்த்தியுள்ளார். ஒரு நாளைக்கு ஒரு லட்சம் வாங்கி வந்த அவர் தற்போது, 3 லட்சமாக சம்பளத்தை உயர்த்தி விட்டாராம். (ஒ)

# காதலின் அருமை காமுகனுக்குப் புரியாது



'பிக்பாஸ்' நிகழ்ச்சியில் நேற்று, கேள்வி - பதில் விளையாட்டின் மூலம் சிநேகனின் வாயிலிருந்து ஏதாவது பிடுங்க முடியுமா என்று பார்த்தார் சுஜா.

"இந்த வீட்டில எல்லாம் சரியா இருக்கா?" என்கிற கேள்விக்கு 'வீடு தான் சரியா இருக்கு. மனுசங்க...?' என்று தத்துவார்த்தமாகப் பதிலளித்தார் சிநேகன்.

"ஜூலி திரும்ப வந்திருக்காங்களே, அவங்களைப் பற்றி?" அடுத்த கேள்வியாகக் கேட்டு சிநேகனின் பதிலை எதிர்பார்த்தார் சுஜா. "போன ஜூலி திரும்பி வரவில்லை" என்பது சிநேகனின் அடுத்த தத்துவ பௌன்சர்.

பின்னர், "காதல் என்றது ஒரு பூ மாதிரி. ஒரு முறைதான் மலரும்' என்கிற விக்ரமன் படங்களின் வசனங்கள் போல காதலின் மகத்துவத்தைப் பற்றி வரிசையாகச் சொல்லிக் கொண்டிருந்தார் சிநேகன்.

'காதலின் அருமை காமுகனுக்குப் புரியாது" என்றெல்லாம் அவர் இடித்துரைத்தது யாரை? (ஆரவ் வையா?) "தோற்ற காதல்தான் சொர்க்கத்தில் சென்று சேரும்' என்றெல்லாம் பினாத்திக் கொண்டிருந்த சிநேகனின் தாடிக்குப் பின்னால் பெரும் சோகமும் நிறைய துர்தேவதைகளும் இருக்கும் போலிருக்கிறது.



# அதிர வைத்த நயன்

சிரஞ்சீவி ஜோடியாக நடிக்க நயன்தாரா 6 கோடி ரூபா (இந்திய மதிப்பில்) சம்பளமாகக் கேட்டுள்ளமையால் தெலுங்குத் திரையுலகில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு 'ஐயா' படம் மூலம் தமிழ்த் திரை உலகில் அறிமுகமாகி 12 வருடங்களாக முதல் நிலை கதாநாயகியாக வலம் வருகிறார் நாயன்தாரா.

அவர் நடித்த அனைத்துப் படங்களும் வசூலை அள்ளிக் குவித்துள்ளன. காதல் சர்ச்சைகளில் சிக்கியும் அவரது மார்க்கெட் சரியவில்லை.

தற்போது அவர் நடித்திருக்கும், 'இமைக்கா நொடிகள்', 'கொலையுதிர் காலம்', 'அறம்', 'வேலைக்காரன்' ஆகிய படங்கள் அடுத்தடுத்து திரைக்கு வரவுள்ளன.

தனது மார்க்கெட் உயர்வால் 4 கோடி சம்பளம் வாங்கிவந்த அவர், தற்போது தெலுங்கில் தயாராகும் 'உய்யலவாடா நரசிம்ம ரெட்டி' என்ற படத்தில் சிரஞ்சீவி ஜோடியாக நடிக்க 6 கோடி ரூபா சம்பளம் கேட்டு பட உலகை அதிர வைத்து உள்ளார்.

இந்தப் படத்தில் சிரஞ்சீவி சுதந்திரப் போராட்ட வீரராக நடிக்கிறார். இந்தப் படத்தை சிரஞ்சீவி மகன் ராம்சரண் 150 கோடி ரூபா செலவில் தயாரிக்கிறார். சுரேந்திர ரெட்டி இயக்குகிறார்.

தெலுங்கு, ஹிந்தி, கன்னடம் ஆகிய 3 மொழிகளில் தயாராவதாலும் அதிக நாட்கள் கால் ஷீட் கொடுத்து நடிக்க வேண்டியிருப்பதாலும் நயன்தாரா இந்தத் தொகையைக் கேட்பதாகக் கூறப்படுகிறது.

நயனின் விருப்பத்துக்கு ஏற்ற சம்பளத்தைக் கொடுக்க ராம் சரணும் ஒத்துக்கொண்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

இந்தப் படத்தில் அமிதாப்பச்சனும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். (ஒ)

# ஹிந்தியில் ஆர்வம்



ஐஸ்வர்யா ராஜேஷ் நடித்த 'டாடி' என்ற ஹிந்தி படம் விரைவில் திரைக்கு வரவிருக்கிறது.

இந்தப் படத்தில் ஐஸ்வர்யா ராஜேஸின் நடிப்பைப் பார்த்த ஹிந்திப் பட உலகப் பிரபலங்கள், மனம் திறந்து அவரைப் பாராட்டினார்களாம்.

நெகிழ்ந்துபோன ஐஸ்வர்யா ராஜேஷ், நல்ல கதையம்சம் உள்ள ஹிந்திப் பட வாய்ப்புகள் வந்தால், ஏற்றுக் கொள்ளலாம் என்று முடிவெடுத்து இருக்கிறாராம்.(ஒ)

# காம்ராஜின் கனவு அவதாரம்



ராஜா ராணி" படத்தில் ஆர்யாவின் நண்பராக நடித்தவர் அருண்ராஜா காமராஜ். சிவகார்த்திகேயன் நடித்த "மான் கராத்தே" படத்தில் சிவகார்த்திகேயனுக்கு நண்பராகவும் நடித்துள்ளார்.

நிஜ வாழ்க்கையிலும் சிவகார்த்திகேயனின் நண்பராகயிருக்கும் அருண்ராஜா, "கபாலி" படத்தின் "நெருப்புடா" பாடலின்மூலம் பிரபலமானார். இந்தப் பாடலை எழுதிப் பாடியவரும் இவர்தான்.

தற்போது பெண்கள் கிரிக்கெட்டை மையமாக வைத்துப் படம் எடுக்கவுள்ளார். அப்படம் குறித்து அவர் கூறுவதைப் பார்க்கலாம்.

"சினிமாவுக்கு வந்ததே இயக்குநராக வேண்டும் என்ற கனவோடுதான். ஆனால், காலசக்கரம் சுழன்று என்னை முதலில் காமெடியனாக, பாடலாசிரியராக, பாடகராக மாற்றிவிட்டது.

என்னுடைய படத்துக்கான 'ஸ்கிரிப்ட்'டை எட்டு மாதங்களுக்கு முன்பே எழுதிவிட்டேன். பெண்கள் கிரிக்கெட் பற்றிய படம்தான். பெண்கள் கிரிக்கெட் பற்றி இதுவரை எந்தப் படமும் வெளிவரவில்லை.

அதனால், இதைக் கருவாக எடுத்தேன். இதில் சில உண்மைச் சம்பவங்களையும் அடக்கியிருக்கிறேன். அதைப் படத்துக்கு ஏற்ற மாதிரி கொடுத்திருக்கிறேன். புது முகங்கள்தான் படத்தில் நடிப்பார்கள். கிரிக்கெட் விளையாடத் தெரிந்த பெண்ணாகயிருந்தால் நன்றாகயிருக்கும். தயாரிப்பும் புதிய நிறுவனமாகத்தான் இருக்கும்." என்றார். (ஒ)

# சந்திப்பு



இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பதில் உதவிச்செயலர் அலிஸ் வெல்ஸ் இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் பேச்சு நடத்தினார். வெளிவிவகார அமைச்சில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் உள்ளிட்ட அதிகாரிகளும், இலங்கை வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரியவசமும் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றனர். அமெரிக்கா - இலங்கை இடையிலான பரஸ்பர உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பாக இந்தச் சந்திப்பில் பேசப்பட்டதாக, இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. அதேவேளை, கொழும்பு வந்துள்ள அலிஸ் வெல்ஸ் நேற்று சிவில் சமூகப் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்திருந்தார். (உ)


# சர்வதேச வழக்காக மாற்றவேண்டும்!

பிரேசிலை விட்டுத் தப்பிச் சென்ற இலங்கைத் தூதுவரான, ஜெனரல் ஜெகத்ஜயசூரியவுக்கு எதிரான வழக்கை, ஹேக்கில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று பிரித்தானிய நாடாளுமன்றத்தின் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவரான, போல் ஸ்கலி தெரிவித்துள்ளார். 'இராஜதந்திர விலக்குரிமைக்குப் பின்னால் மறைந்திருப்பதோ, சட்ட சவாலை எதிர்கொள்வதற்கு முன்னர் தப்பியோடுவதோ, போதுமானதல்ல. ஜெனரல் ஜெயசூரியவைக் கைது செய்வதற்கான சர்வதேச பொலிஸாரின் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட வேண்டும். ஹேக்கில் உள்ள அனைத்துலக நீதிமன்றத்துக்கு இந்த வழக்கைக் கொண்டு செல்ல வேண்டும். இரண்டு தரப்புகளுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய, திறந்த வெளிப்படையான நீதி



செயல்முறைகளை இலங்கை அரசாங்கம் உருவாக்க வேண்டும். இறந்துபோனவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு சரியான பதிலும், நீதியும் கிடைக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# இன்றைய கருத்தோவியம்




# மஹிந்தவைக் கண்டு இப்போதும் அஞ்சுகின்றனர்

மஹிந்த ராஜபக்ஷவை கண்டு இன்றும் பலர் அஞ்சுகின்றனர். பல ஊடகங்கள் இன்றும் மஹிந்த ராஜபக்ச மீதான அச்சத்திலேயே செய்திகளை நிராகரித்து வருகின்றன என்று ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் பொதுச்செயலாளர், அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். நாம் ஒரு போதும் மஹிந்த தரப்பை கண்டுஅஞ்சவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

# சரத் பொன்சேகாவை ஏன் விசாரிக்கவில்லை?



இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக, போர்க்குற்றச்சாட்டுகள் எதுவும் பதிவு செய்யப்படாதது ஏன் என்று, மகிந்த ராஜபக்ச ஆதரவு கட்சியான, இலங்கை பொதுஜன முன்னணி கேள்வி எழுப்பியுள்ளது. இலங்கை பொதுஜன முன்னணியின் அமைப்பாளரான அஜித் பிரசன்ன, இதுகுறித்து கருத்து வெளியிடுகையில்,

" ஜெனரல் ஜெயசூரிய, அப்போதைய இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவின் கீழ்தான் செயற்பட்டவர். அமெரிக்கா ஆதரவு அரசாங்கத்துடன் இருப்பதால் தான், இத்தகைய குற்றச்சாட்டில் இருந்து சரத் பொன்சேகாவுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஜெகத் ஜயசூரியவுக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டுகள், இலங்கை இராணுவத்துக்கு மோசமான அடியாகும். புலம்பெயர் தமிழர்களின் இந்தக் குற்றச்சாட்டுகளை நாம் கண்டிக்கிறோம். இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் மகேஸ்சேனநாயக்க நியமிக்கப்பட்டதிலும், கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா நியமிக்கப்பட்டதிலும், சரியான நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# மாணவர் காப்புறுதி விரைவில் நடைமுறைக்கு

பாடசாலை மாணவர்களுக்கு காப்புறுதி வழங்குதவற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தயார் செய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். அடுத்து வரும் சில வாரங்களில் அது நடைமுறைக்கு வரும் என்று அவர் கூறியுள்ளார். இதனூடாகப் பாடசாலை மாணவர்களுக்கு பல பிரதிபலன்கள் கிடைக்கும் என்று கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தத் திட்டத்தின் கீழ் அறநெறி கல்வியை பயிலும் பௌத்த தேரர்களையும் காப்புறுதி செய்வதாக அவர் கூறியுள்ளார். அதன்படி நோய் காரணமாக தங்கி சிகிச்சை பெறும் பௌத்த தேரர்களுக்கு நாளொன்றுக்கு 1000 ரூபா படி 30 நாட்கள் வரை 30,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த காப்புறுதித் திட்டம் அரச, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளிலும் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படும் என்று கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கூறினார். (உ)

# இன்று முதல் பொலித்தீனுக்குத் தடை


பொலித்தீன் தடை இன்று முதல் அமுலுக்கு வருகிறது. பொலித்தீனுக்குப் பதிலாக சுற்றாடல் நேய மாற்று வழிகள் நோக்கி மக்களை திருப்பும் முயற்சிகளை நாட்டில் முன்னெடுக்கும் வகையில் இந்த தடை நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன் கீழ் ஹென்னானிகல ஆதிவாசிகளுக்கு ஓலைகளைப் பயன்படுத்தி பைகளைத் தயாரிப்பது பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிபெற்ற ஆதிவாசிகள் ஓலைப் பைகளைத் தயாரித்து சந்தையில் விற்பனை செய்யத் தயாராக இருக்கிறார்கள் என கூறப்பட்டது. இதேவேளை, பொலித்தீனுக்கான மாற்றீடு பற்றியும் அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக குறிப்பிட்டுள்ளது. (உ)

# நம்பிக்கைச் சாத்தியம் உள்ளது



மிகவும் மோசமான வன்முறை, இழப்பு, அவலங்களுக்கு மத்தியிலும், அன்பு, பராமரிப்பு, நம்பிக்கைக்கான சாத்தியம் பெருமளவில் இருப்பதாக இலங்கையின் உளவள ஆலோசகர் கெத்சி ஷண்முகம் அம்மையார் தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் அரசாங்கம் வழங்கும் மக்சேசே என்ற உயரிய விருது விழாவில் அவர் உரையாற்றினார். இதன்போது தனக்கான விருதை பெற்றுக்கொண்டார். இந்த விழா நேற்றுப் பிலிப்பைன்ஸ் கலாசார நிலையத்தில் இடம்பெற்றது. பிலிப்பைன்ஸின் முன்னாள் ஜனாதிபதி ரமொன் மக்சேசேயின் பெயரால் பல துறைகள் சார்ந்து வழங்கப்படும் இந்த மக்சேசே விருது, ஆசியாவின் நோபல் பரிசாகக் கருதப்படுகிறது. இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் மிகவும் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட பெண்களையும் சிறுவர்களையும் பராமரிப்பதில் கெத்சி அம்மையார் வெளிப்படுத்திய மனித நேயத்துக்காகவும், உளவியல் துணை வழங்குவதில் இலங்கையின் ஆற்றலை கட்டியெழுப்புவதில் இவரது அயராத உழைப்புக்காகவும் 2017ஆம் ஆண்டுக்கான மக்சேசே விருது இவருக்கு வழங்கப்படுவதாக ரமொன் மக்சேசே மன்றம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)



# கைது செய்ய உத்தரவு

பர்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் பிரதான விநியோகத்தரைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவித்திருப்பதாக மேலதிக சொலிசிஸ்டர் ஜெனரல் நேற்று பிணைமுறி ஆணைக்குழுவில் கூறியுள்ளார். குறித்த நிறுவனத்தின் தொலைபேசிக் கட்டமைப்பின் தகவல்களை அழித்த குற்றச்சாட்டில் அதன் பிரதான விநியோகத்தரான நுவன் சல்காது என்பவரைக் கைது செய்யுமாறு கூறப்பட்டுள்ளது. பர்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் தகவல் தொடர்புப் பணிப்பாளர் சசின் தேவதந்திரியிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கடந்த நாட்களில் விசாரணை செய்திருந்ததுடன், வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக அவர் நேற்று பிணைமுறி ஆணைக்குழுகு அழைக்கப்பட்டிருந்தார். இதன்போது அவரிடம், தொலைபேசி அழைப்புக்களை பதிவு செய்யும் கட்டமைப்பு குறித்து விசாரிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு அவர், அந்தக் கட்டமைப்பில் அனைத்து தொலைபேசி உரையாடல்கள் உள்ளிட்ட அனைத்து தகவல்களும் பதிவாகிறது எனக் கூறியுள்ளார். அதேவேளை, பர்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் பிரதான விநியோகத்தரான நுவன் சல்காது என்பவர் சுமார் 15, 20 தொலைபேசி அழைப்புக்களின் பட்டியலை வழங்கி அதனை கட்டமைப்பில் இருந்து அழித்து விடுமாறு கூறியதாக வாக்குமூலம் வழங்கியுள்ளார். (உ)

## நாளை நாளும் கோளும்

02.09.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம் 17 ஆம் நாள்

ஏகாதசி மு.ப. 09-45 வரை | பூராடம் காலை 08.25 வரை | மரணயோகம் | பரிவர்த்தன ஏகாதசிவிரதம்

இராகுகாலம் 09.05 - 10.35 | சுபநேரம் 03.05 - 04.35 | எமகண்டம் 01.35 - 03.35

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெற்றி | இலாபம் | ஆதரவு | வரவு | ஆக்கம் | மறதி | போட்டி | நன்மை | விவேகம் | சுகம் | சுபம் | வீண்செலவு |

எதிரொலி
Ethiroli

# பலவீனத்துடன் போராட முடியாது



“மக்களின் வாழ்க்கைத் தேவைகளும் அரசியல் உரிமையும் சமவலுவுடையவை. அவற்றுக்கான தீர்வும் இணைந்தே காணப்பட வேண்டும்” என சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி நகர் கிராம அலுவலர் பிரிவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் கருத்துத் தெரிவித்த அவர், “பாதிக்கப்பட்டவர்களாகவும் சமூக நிலையில் பலவீனமானவர்களாவும் இருந்து கொண்டு உரிமைக்காகப் போராட முடியாது. ஆனால், தமிழ் மக்களுடைய இன்றைய அரசியல் தலைமைகள் மக்களுக்கு மாறாகவே செயற்படுகின்றன. இதை நீங்கள் நன்றாக அவதானித்துக் கொண்டிருக்கிறீர்கள். சமகால அரசியல் விடயங்களை மக்களாகிய நீங்கள் நேரடியாக அவதானித்து வரும் அதேநேரம், ஊடகங்கள் வாயிலாகவும் அவற்றை அறிந்துவருகின்றீர்கள். ஏனைய இனங்களைவிட கடந்த முப்பது வருடங்களாக நடைபெற்ற யுத்தத்தின்போது அனைத்தையும் இழந்த நிலையில் பல தேவைகள் உள்ள சமூகமாகவும், பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றவர்களாகவும் உள்ளோம்.” - என்றார். (உ)

## அந்த நாள் ஞாபகம்.....!



## 1984.09.01

யாழ்ப்பாணம் திக்கத்தில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் 20 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

## ரயிலுடன் மோதுண்டு ஒருவர் பலி

மட்டக்களப்பிலிருந்து, கொழும்பு நோக்கிப் புறப்பட்ட இரவு நேர ரயிலில் மோதுண்டவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த சம்பவம் நேற்று இரவு 8.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது. நபர் ஒருவர் மட்டக்களப்பு திராய்மடுப் பகுதியில் வைத்து ரயிலுடன் மோதுண்டுள்ளார். அவரது சடலம் ரயில்வே அலுவலர்களால் மீட்கப்பட்டு ஏறாவூர் ரயில் நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் ரயில் நிலைய அதிகாரிகள் கூறியுள்ளனர். அத்துடன், உயிரிழந்தவர் தொடர்பான விவரங்களை விசாரித்து வருவதாக ஏறாவூர் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். மேலும், இவரின் சடலம் ஏறாவூர் ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் ஏறாவூர் பொலிஸார் அறிவித்துள்ளனர். (உ)

## வரியற்ற இணையம்

இணையத்தளத்தைப் பயன்படுத்த இதுவரை அறவிடப்பட்டு வந்த 10 வீத தொலைத் தொடர்பு வரி இன்று முதல் நீக்கப்படுவதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். இணையத்தள சேவைகளை வழங்கி வரும் நிறுவனங்களுக்கு இது குறித்து ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அத்துடன், இணையத்தள சேவைகளுக்கு மேலதிகமாக 10 வீத டேட்டாக்களை அதிகரித்து வழங்கவும் நிறுவனங்கள் இணங்கியுள்ளன. இதன் மூலம் குறைந்த செலவில் இணையத்தளத்தைப் பயன்படுத்த முடியும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ)

## வவுனியாவில் ஆடை நிலையத்தில் தீ



வவுனியாவிலுள்ள பிரபல ஆடை விற்பனை நிலையமொன்றின் களஞ்சிய சாலையில் இன்று வெள்ளிக்கிழமை காலை தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. மேற்படி களஞ்சியசாலையின் மின் இணைப்பைத் துண்டித்து தீயை அணைக்க வவுனியா நகரசபையின் தீயணைப்புப் பிரிவும், பொலிஸாரும் மற்றும் பொதுமக்களும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தீயை அணைப்பதற்கான முயற்சிகள் ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், விற்பனை நிலையத்தின் களஞ்சிய சாலையில் இருந்த பொருட்களில் பெரும்பாலானவை தீக்கிரையாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. எனினும், அங்கிருந்த கணினியில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக இந்தத் தீ ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (உ)

## கதிரிப்பாய் பகுதியில் கத்தி வெட்டு

அச்சுவேலி கதிரிப்பாய்ப் பகுதியில் உறவினர் இருவருக்கிடையில் ஏற்பட்ட கருத்துவேறு பாடு கத்திவெட்டில் முடிவடைந்துள்ளது. இதில் ஒருவர் வெட்டுக்காயங்களுக்கு உள்ளானதுடன், மற்றையவர் அடிகாயங்களுக்கு உள்ளானார். இந் நிலையில் இவர்கள் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இச் சம்பவம் நேற்றுமுன் தினம் மாலை இடம்பெற்றிருந்ததாகப் பொலிஸார் கூறினர். சம்பவத்தில் தங்கவேலாயுதம் பிரதீப் (வயது-31) மற்றும் எஸ்.அஜந்தன் (வயது-32) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். (எ)

## கையில் காயம்

சிறிய உழவு இயந்திரத்தை திருத்த வேலைக்கு உட்படுத்திக்கொண்டிருந்த போது ஒருவர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். அவர் ஊர்காவற்துறை பிரதேச வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது. நாரந்தனை தெற்கு ஊர் காவற்றுறை பகுதியினை சேர்ந்த கனியூட் ஜெயானந்தன் கபிலன் (வயது-28) என்ற இளஞனே கையில் காயமடைந்தவர். வீட்டில் சிறிய உழவு இயந்திரத்தின் இன்ஜினை திருத்த வேலைக்கு உட்படுத்திய போது சுற்றிக்கொண்டிருந்த பட்டி கையினை வெட்டியதாக கூறப்பட்டுள்ளது. (உ-212)

## ஊடகவியலாளர் குருநாதன் மறைவு



மூத்த ஊடகவியலாளர் சின்னையா குருநாதன் இன்று காலை திருகோணமலையில் காலமானார். தமிழ் , ஆங்கில ஊடகங்களுக்கு திருகோணமலையிலிருந்து இவர் செய்திகள், கட்டுரைகளை எழுதி வந்தார். அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஊடகப் பணியில் ஈடுபட்டிருந்த இவரது மறைவு, ஊடகத்துறைக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியுள்ளது. இவரது இறுதிச் சடங்கு, நாளை மறுதினம் மு.ப. 10 மணிக்கு நடைபெறும் என்று குடும்பத்தினர் அறிவித்துள்ளனர். (உ)

### முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பொன்சேகா...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவியதாகக் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொய் என்றும் கூறியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு யாராவது பொறுப்பேற்க வேண்டும் என்றால், அந்தப் பொறுப்பு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கே உள்ளது. ஏனென்றால் அவர் தான் அப்போது இராணுவத் தளபதியாக இருந்தார் என்றும் ஜெனரல் ஜயசூரிய தெரிவித்துள்ளார். (எ)

**ரணிலைச்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகள், முகங்கொடுக்கும் சவால்கள், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்திய - இலங்கைக்கு இடையில் காணப்படும் நீண்டகால நட்புறவு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (எ-09)

**சாட்சியத்து...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகொலை வழக்கின் சாட்சியம் வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து நேற்றுமுன்தினம் அழைத்து வரப்பட்டு இரவு அனுராதபுரச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டார்.

அதன்போது அன்றையதினம் இரவு அனுராதபுரச் சிறைச்சாலையில் வைத்து சாட்சியத்துக்கு இனம் தெரியாத நபர்கள் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். அது தொடர்பில் நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.எம்.எம். றியாழ் முன்னிலையில் சாட்சியம் முற்படுத்தப்பட்ட வேளை, நீதவானிடம் சாட்சி தனக்கு விடுக்கப்பட்ட கொலை மிரட்டல் தொடர்பில் முறையிட்டார். அதனை அடுத்து நீதவான் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு பணித்தார். (எ)

**இலங்கை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். அத்துடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அத்துல் கேசாப்பும் இணைந்திருந்தார்.

இச்சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கு,கிழக்கு மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், காணிவிடுவிப்பு, கைதிகள் விடுவிப்பு, காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளில் காட்டும் தாமதங்கள் குறித்தும் இச்சமயத்தில் வெல்ஸ் அம்மையாரிடத்தில் எடுத்துரைத்துள்ளனர்.

இதன்போது புதிய அரசியலமைப்பு, காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தை அமைக்கும் பணிகளை முன்னெடுத்தல் உள்ளிட்ட விடயங்களுக்கு தாம் தொடர்ந்தும் அரசாங்கத்துக்கு உரிய அழுத்தங்களை வழங்குவோம் என அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் பதில் உதவிச் செயலர் அலிஸ் வெல்ஸ் உறுதியளித்துள்ளார். (எ-09)

**இராணுவ...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் துறைமுகங்களை யுத்த தேவைக்கு பயன்படுத்த எந்த நாட்டுக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. ஆனால் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் சேர்ந்து எமது துறைமுகங்களை வர்த்தக ரீதியில் அபிவிருத்தி செய்வோம் எனவும் தெரிவித்தார். (உ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 01.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.